தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, பிப்ரவரி 8, புதன்கிழமை

தை 26, விபவ—திருவள்ளுவராண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திரு. கே. ரமணி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1, உறுப்பினர் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே, ரமணி) : இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசியலமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் இப்போது உறுதிமொழி எடுத்துக் கொள்வார்.

பின்னர் திரு. பி. வி. இராஜேந்திரன் உறுதிமொழி* எடுத்துக் கொண்டார்.

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. கே. ரமணி) : அடுத்து, பேரவையின் இன்றைய அலுவல் '' அரசியலமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல் '' ஆகும். இப்பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதிகளில் 7-வது விதி, உள் விதி 4-ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், அதை வழி மொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு :

நியமனம் செய்யப் பெற்றவர் ..	டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்
முன் மொழிந்தவர்	மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
வழி மொழிந்தவர்	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்

*உறுதிமொழி கடவுள் பெயரால் எடுத்துக் கொள்ளப் பெற்றது